# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | பிப்ரவரி 1991 | இதழ் 2



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.**

# நன்றி அறிவிப்பு

கடந்த 26-1-91 திருச்சியில் நடைபெற்ற திருமறை ஆசான் நான்காவது ஆண்டு விழா மற்றும் வாசகர்கள் கருத்தரங்கத்தில் பங்கேற்று விழாவினை சிறப்பித்த அனைத்து வாசகர்களையும் வாழ்த்தி எங்கள் நன்றி-யினைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக நெடுந்-தூரம் பயணம் செய்து வந்து கலந்துகொண்டவர்களை-யும், திருச்சி கருமண்டபம் கிறிஸ்துவின் சபையாரையும் அதன் ஊழியர் திரு. P. பால்ராஜ் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது அடுத்த வாசகர்கள் கருத்தரங்கம் வருகிற மே மாதம் பாளையங் கோட்டையில் நடைபெறும். அதற்-காக ஜெபியுங்கள், கலந்து கொள்ள ஆயுத்தமாகுங்கள்.

இங்ஙனம்,

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,**
*2, மணல்மேடுவீதி, ஈரோடு - 638002.*

## இதழின் உள்ளே


1. *ஐக்கியத்துக்காக இயேசுவின் ஜெபம்* 1-6
2. *ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது* 7-9
3. *தேவ வைராக்கியம்* 10-12
4. *நாணயம் ஒரு கிறிஸ்தவ பண்பு* 13-14
5. *கர்த்தருடைய சபையைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள்* 15-18
6. *சகோதரத்துவத்தால் கிடைக்கும் ஆசிர்வாதங்கள்* 19-23
7. *ஜெபத்துக்குத் தடைகள்* 24-27
8. *கிறிஸ்தவ மார்க்கம்* 28

# THIRUMARAI AASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. Feb—1991 Issue 2


**ஆசிரியவுரை**

## ஐக்கியத்துக்காக இயேசுவின் ஜெபம்

**(யோவான் 17:11,20-23)**

தற்காலத்தில் கிறிஸ்தவர்களிடையே காணப்படுகிற பிரி-வினைகளைப்பற்றியும் அதைப் பற்றி யாருமே கண்டு கொள்ளாத-தைப் பற்றியும் நினைக்கும் போது, இவைகளை யெல்லாம் கர்த்-தர் அங்கீகரித்துக் கொண்டார் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. அப்படியானால் யோவான் 17:11,20-23 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற இயேசுவின் உருக்கமான ஜெபத்துக்கு என்ன பொருள்?

சுமார் ஆறு கேள்விகள் கேட்டு, இந்த ஜெபத்தின் பொரு-ளைக் கண்டு பிடிக்க முயல்வோம்.

### 1. இயேசு ஐக்கியத்தை விரும்புகிறாரா?

இந்த ஜெபத்தில் காணப்படுகிற சொல்லாட்சியைக் கவனிக்-கும் போது ஆம் என்றே சொல்லத் தோன்றுகிறது. இயேசு ஐக்-கியத்தை அவ்வளவு பெரிதுபடுத்தவில்லை என்போமானால் பின் ஏன் அவர் இவ்வளவு உருக்கமாக எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபிக்க வேண்டும்?

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, எப்-பொழுதெல்லாம் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றியும் யெகோ-வாவின் ஆலயமாகிய வீட்டைப் பற்றியும், சபையைப் பற்றியும் குறிப்புகள் காணப்பட்டாலும் அவைகள் எல்லாமே ஒருமைப்பாட்-

டை வலியுறுத்தும் வண்ணம் ஒருமையிலேயே சொல்லப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். யெகோவாவின் **ஆலயமாகிய** பர்வதம் (ஏசாயா 2:2) தேவனுடைய **வீட்டிலே**, ஜீவனுள்ள தேவனுடைய **சபை** சத்தியத்துக்குத் தூணும் **ஆதாரமும்** (1தீமோ 3:15) என்றென்றைக்கும் அழியாத **ஒரு ராஜ்ஜியத்தை** (தானி 2:44) இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய **இராஜ்ஜியத்தை** (மாற்கு 9:1), என் **சபையைக்** கட்டுவேன் (மத் 16:18)

அது அல்லாமல் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசிய பரிசுத்த மனிதர்களின் மூலமாக இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களின் ஒற்றுமைக்காக மன்றாடுகிறார் **''சகோதரரே, நீங்கள் எல்லாரும் யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்''.** என்கிறார் பவுல் (1கொரி 1:10)

இங்கே ஒற்றுமையை எந்த அளவுக்கு வலியுறுத்துகிறார் என்று கவனியுங்கள். ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏக யோசனையுள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும், அறிவுரை கூறி விட்டு 13-ம் வசனத்தில் **'கிறிஸ்து பிரிந்திருக்கிறரா?** என்று சிந்தனையைத் தூண்டும் ஒரு கேள்வியையும் கேட்கிறார்• இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கிற எந்த மனிதனும் கிறிஸ்து பிரிவினையை அங்கீகரிக்கிறார் என்ற கூற்றை நம்பவே மாட்டான்.

**2. எந்த அளவுக்கு விசுவாசிகளின் ஒருமைப்பாட்டை கோருகிறார்?**

**''அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கித்தற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்.** (வ. 21) என்று ஜெபித்தார். பிதாவுக்கும், குமாரனுக்கும் ஒற்றுமையின் நெருக்கத்தை விளக்குவதற்கு வார்த்தைகளே கிடையாது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது உணவை விட முக்கியமானது என்கிறார்,

(யோவான் 4 : 34)

**''எனக்குச் சித்தமானதைத் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்''** என்று கூறி தான் பிதாவின் மேல் கொண்டிருக்கிற மதிப்பையும் ஐக்கியத்தையும் பறைசாற்றுகிறார், (யோவான்5,30)

**''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்'** எனத் தாழ்மையாகவும், தந்தையின் விருப்பத்துக்கு இசைவாக நடப்பதற்குமே வந்தேன் என்று தன் பூலோக வருகைக்கான காரணத்தைச் சொல்லுகிறார்.
(யோவான் 17 : 4)

**''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்' நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த பணியைச் செய்து முடித்தேன்** என்று அடக்கத்தோடு சொல்லுகிறார். (யோவான் 17;4).

இப்படி பிதாவும் குமாரனும் ஒருவருக்கொருவர் இணக்கமாகச் செயல்படுகிறார்கள். தேவத்துவத்துக்குள் இம்மியேனும் வேற்றுமையின் நிழலைக் காணமுடியாது. அதைப் போன்ற ஒரு ஐக்கியம் அவருடைய உபதேசங்களைக் கேட்டு விசுவாசிக்கிற மக்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார். அவ்விதமான ஐக்கியம் ஏன் வேண்டும் என்கிறார்? அப்பொழுதுதான் **இயேசுவை பிதா தான் உலகத்துக்கு அனுப்பி வைத்தார் என்று உலகம் நம்பும்** என்கிறார். இன்றைக்கு கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள பிரிவுகளினால் உலகத்து மக்களுடைய கண்களுக்கு, கிறிஸ்தவம் மக்களை நல்வழிப் படுத்தத் தோன்றின பல்வேறு மதங்களில் ஒன்று என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அதனால் இயேசுவை ஒரு அவதார புருஷராக, சமூக சீர்திருத்தவாதியாக சன்மார்க்க நெறியாளராக, ஏழை பங்காளனாகப் பார்க்கிறார்களேயல்லாமல் உலக இரட்சகராகப் பார்ப்பதில்லை. சகோதரர்களே! நம்முடைய ஒற்றுமைக் குறைவு எவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று அறிந்து, பிரிவினை எண்ணங்களை தவிர்த்து ஒன்று படுவோம்.

### 3, இந்த ஒற்றுமை சாத்தியமா!?

தேவனும் கிறிஸ்துவும் ஒன்றாயிருந்தது போல மானிடர்களாகிய நாம் இருப்பது சாத்தியமில்லை, என்று பலர் ஆயாசப்படுகின்றனர். அப்படிப் பட்டவர்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மைப் போலவே இயேசுவும் நினைத்திருந்தால், ஏன் ஒருமைப் பாட்டை வலியுறுத்தி உருக்கமாக ஜெபித்தார்? ஏன் பரிசுத்த மனிதர்களைக் கொண்டு ஒற்றுமையைப்பற்றி எழுத சொன்னார்? நமக்குத் தெரிந்தது ஆண்டவருக்கு தெரியாமற் போயிற்று என்று நினைக்கலாமா? நடக்க முடியாத ஒன்றைத் தொடர்ந்துவலியுறுத்துவாரா? நிச்சயமாக மாட்டார்?,

ஆதி சபையிலே அது சாத்தியமாயிற்று. என்றால் இன்று மட்டும் ஏன் முடியாது? வாசியுங்கள் **விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்''** (அப் 2:44). **அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி ....** (அப் 2:46) என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அப் 4:32ல் **விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாய் இருந்தார்கள்** என்றும் வாசிக்கிறோம். இவைகள் எல்லாம் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? விசுவாசிகள் ஒன்றாயிருப்பது சாத்தியம் என்பது தானே? ஆகவே ஆதிசபையார் செய்தபடி, உபதேசித்தபடி நாமும் செய்தால் இப்பொழுதும் ஒற்றுமையாக இருக்க முடியும்.

**4. இப்படிப்பட்ட ஒற்றுமைக்கு அடித்தளம் என்ன?**

**விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** (ரோமர் 10:17) என்று சொல்லியிருக்கிறபடி தேவனுடைய வசனமே அவ்வித ஒற்றுமைக்கு அடித்தளமாக இருக்க முடியும். தேவனுடைய வசனம் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதா? நிச்சயமாக இல்லை என்று நாம் அறிவோம். தேவன் வெளிப்படுத்தின விசயங்களில் முரண்பாடு கிடையாது என்றும்; முரண்பாடுகளெல்லாம் மனிதன் அதைப் புரிந்து கொள்ளும் விதத்தில் தான் என்பதற்கு மத் 16:13-17 ஆகிய வசனப்பகுதிகள் ஓர் அருமையான உதாரணம். இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, மனிதகுமாரனாகிய என்னைப் பற்றி மக்கள், என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று கேட்டார். அதற்கு சீடர்கள், சிலர் உம்மை யோவான் ஸ்நானசன் என்றும் சிலர் எலியா எள்றும், எரேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் கருதுகிறார்கள் என்று கூறினர். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, நீங்கள் என்னை யார் என்று கருதுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு **''நீர் உயிரோடிருக்கிற தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்றார் அதற்கு இயேசு. அவரைப் பாராட்டி, **''யோனாவின் குமாரனாகிய சீமோனே! மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் தந்தையே இதை உனக்கு வெளிப்படுத்தினார்.** என்றார். (மத் 16:17) மனிதருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் கொண்டு ஆராய்ந்தால் ஆளுக்கொரு விதமான விடைகள் கிடைக்கும். ஆனால் தேவனுடைய வெளிப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு

ஆராய்வோமானால் அங்கே பரிபூரண உண்மையும் ஒருமைப்பாடும் காணப்படும் மார்க்க சம்பந்தமான காரியங்களில் தேவனுடைய வசனங்களை மட்டும் ஏற்றுக் கொண்டு, மனித ஞானத்தை ஒதுக்கி விடுவோமானால் அங்கே பிரிவினைக்கு இடமேயில்லை. தேவனுடைய வசனம் எப்போதும் முரண்பாடு இல்லாமல் ஒரே காரியத்தையே போதிக்கிறது.

## 5. இயேசு ஜெபித்த ஒருமைப்பாட்டின் விளைவுகள் என்ன?

இயேசு ஜெபித்த இந்த ஜெபத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் நீர் என்னை அனுப்பினதை **'உலகம் விசுவாசிக்கிறதுக்கு'** என்ற சொற்றொடர் காணப்படுகிறது. ஆதி சபை ஒற்றுமையாக இருந்தது என்று பார்த்தோம். அவர்களுடைய ஒற்றுமை விசுவாசத்தை ஊக்குவித்ததா? அல்லது விசுவாசத்தை பலவீனப்படுத்தியதா? நிச்சயமாகவே, இயேசு எதிர்பார்த்ததைப் போலவே விசுவாசத்தைப் பெருகப் பண்ணிற்று. ஆதிச்சபை எருசலேமில் வெறும் 3000 பேரைக் கொண்டு தொடங்கிற்று. (அப் 2:41). அது வெகு விரைவில் 5000 மாகப் பெருகியது- (அப் 4:4) **விசுவாசிகளின் கூட்டம் பெருகிற்று.** (அப் 6:1) **தேவவசனம் விருந்தியடைந்தது சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று ஆசாரியரில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.** (அப் 6 : 7) இந்தப் பெருக்கத்துக்கு, விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட ஒற்றுமை உணர்வே முக்கிய காரணம்.

அவர்களுடைய ஒருமைப் பாட்டின் பலம், ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்தில் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட உதவிற்று. (கொலோ- 1:23) ஆம் இயேசு கூறியபடி விசுவாசிகள் ஒன்றுபட்டு உழைத்தனர். (அப் 8:4) அவர்கள் காட்டின ஒற்றுமை உணர்வு உலகத்தாருக்கு இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க உதவியது. இன்றைக்குப் பல நூற்றாண்டுகளாக எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் இந்தியாவின் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக்குள் கொண்டு வரமுடியவில்லை. காரணம் என்ன? கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று முரண்பாடான போதனைகளைப் போதித்து மக்கள் மத்தியில் பிரிவினை உண்டுபண்ணி, இயேசு கிறிஸ்துவை **உலக இரட்சகர்** என்ற உயரிய நிலையில் இருந்து கீழே தள்ளி எத்தனையோ கடவுள்களில் இவரும் ஒருவர் என்ற நிலைக்குத் தாழ்த்தி விட்டது.

## 6. இந்த அவல நிலை நீங்க நாம் என்ன செய்யப்-கிறோம்??

இயேசுவை நேசிச்கிறேன் என்று சொல்லுகிற அனைவரும் உண்மையாகவே நேசிப்பார்களானால் அவருடைய கற்பனைகளை கைக் கொள்ள வேண்டும் (யோவான் 14:15) மனுஷருடைய கற்-பனைகளை உபதேசங்களாகப் போதிக்கக் கூடாது (மத் 15:9) அவருடைய கற்பனைக்காக கைக் கொள்ளுகிறவர்கள் ஐக்கியத்தை அசட்டை செய்யமுடியாது. இயேசு ஐக்கியத்துக்காக ஜெபித்தார். அவரைப் பின்பற்றுகிற நாமும் ஐக்கியத்துக்காக ஜெபிக்க வேண்-டும் இயேசு ஐக்கியம் வேண்டி பாடுபட்டார். அவரைப் போலவே நானும் ஐக்கியத்துக்காகப் பாடுபடுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். ஜெபமும் செயல்பாடும் ஒருங்கி-ணைந்தால் வெற்றி நிச்சயம். நெகேமியா நான்காம் அதிகாரத்-தை வாசித்து தியானியுங்கள், பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் எருசலேமின் மதில்களை எண்ணி ஐம்பத்தி இரண்டு நாட்களுக்குள் கட்டி முடித்தார்கள். எப்படி?

### ஒரு கையில் கத்தி, மற்றொரு கையில் சுத்தி

தேவனை நோக்கி ஜெபித்தார்கள். அதோடு நிற்கவில்லை. எதிர்ப்பை சமாளிக்க ஒரு கையில் வாளேந்திக் கொண்டு மறு-கையினால் வேலை செய்தார்கள். நாமும் கூட ஒற்றுமைக்காக ஜெபிக்கவும், உழைக்கவும் வேண்டும். அத்துடன் தேவனுடைய வசனத்தை ஆராய்ந்து பார்த்து தெளிவு பெற வேண்டும். அதுவே ஒருமைப் பாட்டுக்கு அடித்தளம். மனித ஞானத்தை அடிப்படை-யாகக் கொண்டுள்ள எந்த உபதேசத்துக்கும் உடன் படவே கூடாது. அவைகள் தான் இயேசு ஜெயித்த ஐக்கியத்துக்கு சாவு மணி அடித்தவைகள். சிந்திப்பீர்! செயல்படுவீர்!

**E. Z. செல்வநாயகம்**

---

*தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த இராஜ்ஜியமும் பாழாய்ப்போம். தனக்குத் தானே விரோ-தமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம்.*

**லூக் 11:17**

---

# ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது

**மேலும், ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதிலும் ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** (19:24) நாம் சிந்தனைக்கு எடுத்துக் கொண்ட இந்த விஷயத்தை விளக்குவதற்கு இன்னும் இரண்டு வசனங்களைக் கூடப் பார்ப்போம். ''அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து, தம்முடைய சீடர்களை நோக்கி, ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்,

*சீடர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் இயேசு பின்னும் அவர்களை நோக்கி : பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! (மாற்கு 10:23,24)*

வேத வியாக்கியானம் செய்கிற பலருக்கு ஒட்டகம் ஊசி என்ற சொற்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கு சிரமப்படுகிறார்கள். ஆனால் அவைகளை உண்மையான ஒட்டகம், ஊசி என்று எடுத்துக் கொண்டு பொருள் கூறுவ்தற்கு முற்பட்டால் சிரமம் ஒன்றும் இருக்காது. ஏனெனில் இயேசு அவைகளை ஒரு உதாரணமாகத் தான் சொன்னார் என்று நம்பலாம்.

ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்கிறவர்களைக் குறித்து இயேசு சொன்ன காரியம் சீஷர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததற்குக்காரணம் என்ன? ஏனெனில் பெரும்பான்மையான மக்கள் கர்த்தர் மேல் நம்பிக்கை வைப்பதை விட உலக ஐசுவரியத்தின் மீது நாட்டம் உள்ளவர்களாகத் தானே இருக்கிறார்கள்.! நித்தியத்தைப் பற்றி மிக வினயத்துடன் கேள்வி கேட்ட இளைஞன் கூட தன் ஆஸ்தியையெல்லாம் விட்டு விட மனமில்லாமல் தானே விசனத்தோடு திரும்பிப் போய் விட்டான் (மத் 22:37) ஏன், நாமே கூட இயேசுகிறிஸ்து ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாளில் ஆட்சியைக் கைப்பற்றுவார் அவரைப் பின்பற்றுகிற நமக்கு அமைச்சர், வாரியத் தலைவர் போன்ற உயர்ந்த பதவிகள் கிடைக்கும். நிறையப் பேரும் புகழும், பணமும் சம்பாதிக்கலாம் என்று தானே நம்பிக் கொண்டிருக்கிறோம், என்ன ஆண்டவர் திடீரென்று இப்படிச் சொல்லுகிறாரே என்று ஒருவேளை ஆச்சரியப்பட்டிருப்பார்களா?

எது எப்படி இருந்த போதிலும் இயேசு கிறிஸ்து ஐசுவரிய

வான்கள் இரட்சிக்கப்படுவது சிரமம் என்று சொன்னதற்கான காரணங்களைக் கொஞ்சம் துருவிப் பார்ப்போம்.

மக்களில் பெரும்பாலோர் ஒருவரது செல்வப் பெருக்கத்தை வைத்து தேவ ஆசீர்வாதத்தை அளக்க முற்படுகிறார்கள். அது தவறு. ஐசுவரியவான்களில் அநேகர் நியாயமான வழிகளில் பணம் சேர்த்திருக்க மாட்டார்கள். சிலர் பொய் சொல்லியும், திருடியும், வஞ்சித்தும், கொலை செய்தும், தங்கள் சரீரத்தை விற்றும் பணக்காரராகியிருப்பார்கள். பேராசைக்காரன் தன் வீட்டாரையே பணத்துக்காகத் துன்புறுத்துகிறான் (நீதி 15:27) பேராசையுள்ள முதலாளிகள் தங்களுடைய வேலைக்காரர்களை வஞ்சித்தும், கொடுமைப்படுத்தியும் பொருள் சேர்க்கிறார்கள் (யாக் 5:1-4) ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும், சேதமுமான பலவித இச்சைகளினாலும் விழுகிறார்கள் (1தீமோ 6:9) என்று வேதம் எச்சரிக்கிறது.

உலக சம்பத்து நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பெரும் இடறலாக இருக்கிறது. நாம் நம்முடைய உடமைகள் மீதும், நம்முடைய சம்பாத்யத்தின் மீதும் காதல் கொள்ளுகிறோம், தேவனுடைய நீதியையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் தேடுவதை விட மேற்சொன்ன உலக சம்பத்துக்களை அதிகமாக நாடுகிறோம். அவைகளை எப்படி பெருக்குவது, பெருகின்றதை எப்படிக் காப்பாற்றுவது என்பது நமக்கு முக்கியமான பிரச்சனையாகப் போய் விடுகிறது

ஆனால் கர்த்தர் தம்மை தேடுகிறவர்களிடமிருந்து பரிபூரணமான அர்ப்பணிப்பு உணர்வை எதிர்பார்க்கிறார். "**உலகம் முழுவதையும் ஒருவன் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்திவிட்டால் அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்** என்றுகேட்கப்படும் கேள்வியைச் சற்றே சிந்தித்துப் பார்த்து, எந்த அநியாயத்தைச் செய்தாவது சொத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று துடிப்பவர்களோடு நாம் போட்டி போடாதிருப்போமாக.

மேலும் உலக சம்பத்து ஒருவனை அகங்காரியாக்கி விடுகிறது பணக்காரர்கள் ஏழைகளை அற்பமாக எண்ணுகிறார்கள். கர்வமும், 'தான்' என்கிற அகம்பாவமும் பணக்காரர்களுடைய இதயங்களைக் கல்லாக்கி விடுகிறது. அதனால் தான் பவுல் "**இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்புள்ள சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் தாம் அனுபவிப்பதற்கு சகல வித நன்மைகளையும், நமக்குச்சம்பூர்ணமாய்க் கொடு**

கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாரளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர்களாயிருக்கவும்

நித்திய ஜீவனைத் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷங்களாக வைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு (1தீமோ 6:17-19) என்று தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறுகிறார்.

பணத்தின் மேல் ஆசை வைப்பதை விக்கிரக வணக்கத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. விபச்சாரக்காரனாவது அசுத்தனாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய, பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திலே சுதந்திரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே (எபே 5:15, கொலோ:3:5) பொருளாசையுள்ள மனிதன் என்பவன் நியாயமில்லாமல் வேறொருவனுடைய ஆஸ்தியை அபகரிக்க நினைப்பவன்.

பொருளாசைக்காரர்கள் சிந்திக்க மறுக்கிற ஜிவிகள். அவர்கள் அநியாயமாய், லோபத்தனம் பண்ணி சேர்த்து வைக்கிற ஆஸ்திகளையெல்லாம் எவனுக்கோ விட்டுச் செல்ல வேண்டும். தான் அதில் ஒன்றையும் எடுத்துக் கொண்டு போக முடியாது என்பதை உணர மறுக்கிறார்கள். "உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்,

"உண்ணவும், உடுக்கவும், நமக்கு உண்டாயிந்தால் அது போதும் என்று இருக்கக் கடவோம். (1 தீமோ 6:7-8) இதை விட வாழ்க்கையைப் பற்றித் தெளிவு படச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது. அப்படியானால் செல்வமே கூடாது என்று பொருளல்ல. பணம் அல்ல, பண ஆசையே கூடாது என்கிறது. (1 தீமோ 6:10) பணம் இல்லாமல் நாம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. ஆனால் பணம் நம்மை ஆளக் கூடாது. பணத்தை நாம் ஆளவேண்டும். நன்மையான காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

H.A. ஹாலி

# தேவ வைராக்கியம்

ஒரு காரியத்தில் பற்றுறுதியும், பிடிப்பும், வேகமும் உள்ள தன்மையை வைராக்கியம் என்று சொல்லுகிறோம். பக்தி வைராக்கியத்தைக் குறித்து ரோமர் 10:1-3 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் இரண்டு கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். ஒன்று அறிவுக்கேற்ற வைராக்கியம். அது தேவ சித்தத்தை நிறைவேற்ற உதவுகிறது. மற்றொன்று சம்பந்தப்பட்டவர்களுடைய சுய நீதியை நிலை நாட்ட முயற்சிக்கும் வைராக்கியம். இது அவர்களின் மனவிருப்பங்களை தேவன் பெயரால் வெளியிட பயன்படுத்தப்படுகிறது. தன் இனத்தவரின் வைராக்கியம் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தது என்று குறைபட்டுக் கொள்ளுகிறார். அவர்கள் தங்கள் வரட்டுப் பிடிவாதத்தை தேவ வைராக்கியம் என்று தவறாகக் கணக்குப் போட்டுக் கொண்டு தேவ சித்தத்துக்கு எதிர்த்து நின்றார்கள்.

கிறிஸ்தவ மார்க்கம் தேவனுக்காக வைராக்கியம் கொண்ட ஓர் வாழ்க்கைநெறி என்று தீத்து 2 : 14 சித்தரிக்கிறது. நன்மை என்று தெரிகிற காரியங்களில் கிறிஸ்தவர்கள் பற்றுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்கிறார். பேதுரு (1 பேதுரு. 3:13-15) நல்லவர்களாக இருக்க வேண்டும், தூய்மையாக இருக்க வேண்டும், நியாய சிந்தனையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பவைகளெல்லாம் எவ்வாறு கிறிஸ்தவ அறங்களோ அதைபோல வைராக்கியமாக இருக்க வேண்டும் என்பதும் கூட தேவ கட்டளைதான், ஆம், நல்லவைகள், உண்மையானவைகள் நீதியானவைகள் என்று காணப்படுகிற காரியங்களில் வைராக்கியம் தேவை. அவைகளைக் கடைபிடிப்பதில் என்ன சிக்கல்கள், இடறல்கள் வந்தாலும் அவற்றைக் கண்டு பின் வாங்காமல் எதிர்த்துப் போராடும் துணிவும் தெம்பும் தேவை. வைராக்கிய குணம் தெளிவாகத் தெரியக் கூடியது. காலை நேரங்களில் சூரியன் வெளிப்படும்போது அதன் ஒளியும், வெப்பமும் எளிதில் எவருக்கும் தெரியும் அதே போன்று ஒருவர் ஒரு காரியத்தில் கொண்டிருக்கிற ஈடுபாட்டை வைத்து அவருடைய வைராக்கியத்தை எளிதில் கண்டு கொள்ள முடியும். நமது கர்த்தராசிய இாயசு கிறிஸ்து ஒரு சமயம் தேவலாயத்தைச் சுத்திகரிக்க முனைந்த பொழுது அவர் தேவனுக்காகக் கொண்டிருந்த வைராக்கியத்தை நபம் பார்க்க முடிகிறது. இயல்பாக, இயேசு சாந்தமும், பொறுமையுள்ளவர் என்பது எல்லோருச்கும் தெரிந்த உண்மை ஆனால் இங்கே அவருடைய ஆவேசப் பேச்சும், ஆர்ப்பாட்டச் செயல்களும் மக்களைப் பிரமிக்கப் வைத்தது. ''என் பிதாவின் வீட்டைக் கள்ளர் குகையாக்கி விட்டீர்களே என்று சாடி, சவுக்கு ஒன்றை

உண்டு பண்ணி, ஆர்ப்பாட்டம் செய்து, காசுக் கடைக்காரர்களின் மேசைகளைக் கவிழ்த்துப் போட்டு, ஆடு, புறு போன்ற பலியிட வேண்டிய மிருகங்கள், பறவைகளை ஒன்றுக்குப் பல மடங்காக விற்று கொள்ளை லாபம் ஈட்டி, பக்த கோடிகளின் இறையுணர்வைக் கெடுத்து, தேவனுடைய பரிசுத்த வீட்டை வியாபாரக் கேந்திரமாக மாற்றி விட்டீர்களே என்று கண்டித்துத் துரத்துகிறார். இந்தச் சம்பவத்தைச் சீஷர்கள் பார்த்து இயேசுவின் தேவ வைராக்கியத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். (யோவான் 2:13-17)

அப்படிப் போல கிறிஸ்தவர்களும் தாங்கள் கொண்டிருக்கிற விசவாசத்தில் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறிய வேண்டும் என்றும் (ரோமர் 12: 1, 2) அப்படிச் செய்யும் போது அவர்கள் அசதியாக இராமல் விழிப்புள்ளவர்களாக இருந்து, ஆவியின் அனலுடன் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியும். (ரோமர் 12:11) அப்பொழுது நம்முடைய தெளிவான மனப்போக்கையும் எப்போதும் புன்சிரிப்புத் தவழும் பிரகாசமான முகத்தையும், நன்மை செய்வதற்கு விரைந்தோடும் கால்களையும், உற்சாக மனதையும் காண்கிற மக்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். தேவனுடைய உத்தரவுப்படி ஆகாபின் வீட்டாரைச் சங்காரம் செய்யும் போது யெகூவின் வைராக்கியத்தை யோனதாப்புக்கு விவரிக்க ''நீ என்னோடே வந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற வைராக்கியத்தை வந்து பார்'' என்கிறான் (2 ராஜா 10:16) அது போலக் கிறிஸ்தவர்களும், பிசாசின் கிரியைகளை அழித்து ஒழிக்க தேவனுக்காக வைராக்கியமுள்ளறர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் நற்காரியங்களைச் செய்வதிலும் (தீத்து 2:14, 1பேது 3:13) சகோதரர்களை பக்தி விருத்தி அடையச்செய்வதிலும் (1 கொரி 14:12) வைராக்கியமாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான உபதேசம் பெருகி வளர வைராக்கியம் காட்ட வேண்டும். (2கொரி 7:6) உதாரத்துவமாகக் கொடுப்பதில் வைராக்கியம் காட்ட வேண்டும் (2கொரி 9:2-5 ; 8:1-5) கர்த்தரைச் சேவிப்பதில் வைராக்கியமாக இருக்க வேண்டும். (ரோமர் 12:11) ஜெபம் மண்ணுவதிலே வைராக்யமாக இருக்க வேண்டும். (யாக் 5;16) சகோதரரோடு அன்பு கூர்வதிலே ஒருவருக்கொருவர் வைராக்கியமாக இருக்கவேண்டும்.

வைராக்கியம் பாராட்டும் போது அது அறிவுக்கேற்றதாக இருக்க வேண்டும் என்கிற விஷயத்தை மறந்துவிடலாகாது. பவுல் அப்போஸ்தலனுடைய இனத்தார்களின் வைராக்கியம் அறிவுக்கேற்றதாக இல்லை என்று பவுல் குறைமட்டுக் கொள்கிறார். (ரோமர் 10:2) ஏனெனில் அவர்கள் தேவனுடைய நீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். அது பயனற்றது, முரணானது இதே மாதிரியான ஒரு சூழ்நிலையில் தான் பவுல் அப்போஸ்தலன் கூட ஒரு காலத்தில் இருந்தார். (கலா 1:13-14:22-24) அவர் கிறிஸ்துவால் பிடிக்கப்பட்ட பிறகு அதை உணர்ந்து பார்த்து தன் தவறுதல்களுக்கு பிரயாசித்தம் செய்கிற வண்ணம் கர்த்தருக்கு முற்றிலும் தன்னை ஒப்புக் கொடுத்து மிகுந்த வைராக்கியம் பாராட்டினார். ''என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மையாக எல்லாவற்றையும் நஷ்டம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கும் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன் என்று காணப்படும் படிக்கும்..'' பிலி 3:8,9) அதாவது அவருடைய விருப்பம் எல்லாம் தேவனுடைய நீதியின்படி வாழ்வதேயாகும். கிறிஸ்துவால் இழுத்துக் கொள்ளுவதற்கு முன்பு அவருடைய இனத்தாருக்கு இருந்ததைப் போன்றே அவருக்கும் அறிவுக்கொவ்வாத, சுய நீதியை நிலை நாட்டுகிற வைராக்கியமே இருந்தது என்று அவரே ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்கிறார் (அப் 26:9-11)

இன்றைக்கும் கூட குணப்படாத மக்கள், தாங்கள் தேவனுக்குத்தொண்டு செய்வதரக நினைத்துக் கொண்டு தேவ சித்தத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்து தேவனுடைய பிள்ளைகளுக்கு முன்பாக இடறல்களைப் போட்டுக் குழப்பத்தில் ஆழ்த்தி கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற மக்கள் ஒருவருக்கொருவர் குடுமிப்பிடி சண்டை செய்யும்படி உசுப்பி விடுகிறார்கள். அப்படிப் பட்ட மக்கள் பவுல் அப்போஸ்தலனைப் போல குணப்பட்டு ஆரோக்கியமான சுவிசேஷத்தை அறிவிக்கும் காலம் என்று வருமோ!

**டான் விங்க்ளர்**

# நாணயம் ஒரு கிறிஸ்தவ நற்பண்பு

ஒரு மனிதனிடமுள்ள தலை சிறந்த பண்புகளில் நாணயம் என்பது முக்கியமான தொன்றாகும், நேர்மை அல்லது உண்மை என்ற மாற்றுப் பெயர்களும் இதற்குண்டு ஒருவன் இரட்சிக்கப்-பட நாணயம் என்ற இக்குணம் முற்றிலும் அவசியமானதாகும். விதைப்பவன் உவமையை விளக்கிய இயேசு கிறிஸ்து கீழ்க்கண்ட வாறு கூறுகிறார். ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்-தைக் கேட்டு, அதைப் உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார் கள்''- லூக். 8:15 தேவனுடைய வசனமானது வேரூன்றி வளர்ந்து செழித்து கனிதரக்கூடிய ஒரே இடம் உண்மையும் நன்மையுமான இருதயமே.

''நியாய விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படி-யிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறை கல்லும், சுமுத்திரையான மரக்-காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும்; நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்-கள் தேவனாகிய கர்த்தர்'' (லேவி 19:35-36) என மோசேயின் சட்டத்தில் கீழே இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. சங்கீதக்காரன் கூறுவதைக் கேளுங்கள்: ''யார் கர்த்தருடைய பர்வதத்வில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத் திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே'' — (சங் 24:3-4). நேர்மையாக நடக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி நீதிமொழிகள் நமக்குத் தெரிவிப்பது என்ன? ''கள்-ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறை கல்லோ அவருக்குப் பிரியம்'' நீதி. 11:1). ''பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறர்வகளே அவருக்குப் பிரியம்'' (நீதி. 12:22).

இயேசு கிறிஸ்து தனது ஊழியத்தை இவ்வுலகில் செய்து வந்த காலத்தில் நேர்மைக்கு விரோதமான பாவச் செயல்களைச் சுட்டிக்காட்டி, ''விபச்சாரக் செய்யாதிருப்பகயாக, கொலை செய்யாதிருப்பாயாசு, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, ....'' (மாற்கு 10:19) என சொல்லிக் கொண்டே போகிறார். தர்-மப்பணத்தைக் குறித்து ஒருவரும் தங்களைக் குற்றப்படுத்தாத படி எச்சரிக்கையாக இருப்பது பற்றி, ''கர்த்தருக்கு முன்பாக

மாத்திரமல்ல, மனிதருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்'' (2 கொரி 8:21) என அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ ...... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'' (பிலிப் 4:8).

நேர்மை என்னும் நற்பண்பு பற்றிய வசனங்கள் பலவற்றை வேதாகமத்தில் பரவலாகக் காண முடிகிறது. உண்மையாக வாழ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வேதாகமம் எவ்வளவு தான் கூறிய போதிலும், பலர் தொடர்ந்து பொய், ஏமாற்று, திருட்டு பொய்சாட்சிக் கூறுவது போன்ற தீய செயல்களை செய்து கொண்டு தான் வருகின்றனர். பலதரப்பட்ட மக்களிடையே யும் இப்பாவங்கள் பாரபட்சமின்றி காணப்படுவதுதான் பரிதாபத்துக் குரிய காரியமாக இருக்கிறது. எனவேதான், தேவனுடைய வார்த்தையை அதாவது வேதாகமத்தை, புரட்டி திரித்துக் கூறித்திரியும் பலரைக் காண நேரிட்டாலும் நமக்கு வியப்பு ஏற்படுவதில்லை.

தங்களுக்கு கேடு வரத்தக்கதாக வேத வாக்கியங்களைப் புரட்டு கிறவர்களைப்பற்றி பேதுரு எச்சரிக்கிறார் (2 பேதுரு 3:16) அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.'' (2கொரி 4:1-2) தேவ வசனத்தைப் புரட்டுவது சாத்தியமே. அதனால் இவ்வுலகத்தில் சில வசதிகளும், பேரும் புகழும், பணமும் கிடைக்கலாம், ஆனால் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு நாளில் அவர்கள் இரட்டிப்பான தண்டனை அடைவார்கள் என்பது நிச்சயம்,

ஆகையாக, நாம் உண்மையாக நடக்க இன்றே சபதம் எடுத்துக்கொள்வோம். தேவனுடைய வசனத்தைத் திரித்துக் கூறிக் கொண்டு திரிய வேண்டாம். அப்போஸ்தலர் பவுல் கூறியபடி, ''வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' (2 தீமோ 2:15). எபிரேய புத்தக ஆசிரியர் கூறுகிறார்! ''எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; நாங்கள் நல் மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம்'' (எபிரே. 13:18). இந்தத் தீர்மானத்தை நாமும் கொள்வோமா?

**ராபர்ட் பால்** **எஸ்.எஸ், ராஜன்**

# கர்த்தருடைய சபையைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள்

திருமறை ஆசான் வாசகர்களில் பலர் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்காதவர்கள். அவர்களுக்கு உதவ பல வழிகளிலும் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம். கீழ் வரும் வேத வசனங்களை ஆய்ந்து பார்த்து அவைகளில் எந்தெந்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியாமல் இருந்தது என்றும், எந்தெந்த விஷயங்களில் நீங்கள் குறைவுள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்றும் சீர்தூக்கிப் பார்த்துச் சரி செய்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. புதிய ஏற்பாடு சபை என்பதற்குக் கீழ்வரும் மாற்றுப் பெயர்களை அங்கீகரிக்கிறது.

(அ) தேவனுடைய ஆலயம் — 1கொரி 3:16.

(ஆ) கிறிஸ்துவின் மணவாட்டி — எபே 5:21-32

(இ) கிறிஸ்துவின் சரீரம் — கொலோ 1:24 எபே 1:22-23

(ஈ) தேவனுடைய இராஜ்ஜியம் — கொலோ 1:13.

(உ) சபை — எபே 3:10

(ஊ) முதற்பேறுனவர்களின்சங்கம்— எபி 12:13

(எ) கிறிஸ்துவின் சபை — ரோமர் 16:16

இன்றைக்கு சபை என்ற பெயரில் அழைக்கப்படும் பல்வேறு நிறுவனங்கள் தேவ அங்கீகாரம் பெறாதவைகள். பரம பிதா நடாத நாற்றுக்கள். அவைகளுக்கு என்ன சம்பவிக்கும் என்று மத்தேயு 15:13 ஐ வாசித்துச் சிந்தியுங்கள்

2. கிறிஸ்துவின் சரீரம் என்றழைக்கப்படும் சபையின் உறுப்பினர்களை கீல்வரும் பெயர்களால் அழைக்கலாம் என்று வேதாகமம் கூறுகிறது.

(அ) உறுப்பினர்கள் (அவயங்கள்) — 1 கொரி 12:27

(ஆ) சீஷர்கள் — அப் 6:1

(இ) விசுவாசிகள் — 2 கொரி 6:15

(ஈ) பரிசுத்தவான்கள் — அப் 9:13; 1 கொரி 1:1

(உ) ஆசாரியர்கள் — 1 பேதுரு 2:9; வெளி 1:6

(ஊ) கிறிஸ்தவர்கள் — அப் 11:26; 26:28,29; 1பேதுரு 4:16

ஆனால் இன்று நாம் கேள்விப்படுகிற ரோமன் கத்தோலிக்கர், மெதடிஸ்ட், சி. எஸ். ஐ, லுத்தரன் பெந்தே கோஸ்து இன்னும் ஆயிரத்து எட்டுப் பெயர்களும் எங்கிருந்து வந்தவைகள்? நிச்சயமாக வேதாகமத்திலிருந்து அல்ல என்பது தெளிவு.

3. தேவனுடைய மந்தையாகிய சபையை மேய்த்துக் கண்காணிப்பவர்களுக்குக் கீழ்கண்ட பெயர்களை பரிசுத்த ஆவியானவர் கொடுத்தார்.

| கிரேக்கம் | | ஆங்கிலம் | | தமிழ் |
|---|---|---|---|---|
| (அ) Presbuferos | — | Presbyter | — | மூப்பர்கள் (வயது ஆனவர்) |
| | | Elder | — | 1பேது 5:1-4; அப் 20:17-28 |
| (ஆ) Episkopos | — | Bishop | — | கண் காணி தீத்து 1:5-8 |
| | | Overseer | | 1தீமோ 3:1 |
| (இ) Poimen | — | Pastor | — | மேய்ப்பர் எபே 4:13 |
| | — | Shepherd | | |

மூல மொழியாகிய கிரேக்கத்தில் உள்ள மூன்று சொற்களுக்கும், ஆங்கிலத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் இரண்டு சொற்றளாக ஆறு சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்குச் சமமாக தமிழிலும் மூன்று சொற்கள் உண்டு. இந்த சொற்கள் அனைத்துமே ஒரே வேலையைச் செய்யும் மூப்பர்களையே குறிக்கிறது. அப் 20-17-28 வரை உள்ள வசனங்களைக் கவனித்து வாசியுங்கள். 17ம் வசனத்தில் பவுல் எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களை வரவழைக்கிறார். 28-ம் வசனத்தில் அவர் மூப்பர்களை நோக்கி பரிசுத்த ஆவி உங்களைக் **கண்காணிகளாக** வைத்த .. ஆகவே மூப்பர்கள் (Elders) என்றாலும் கண்காணிகள் (Overseers) என்றாலும் ஒன்றுதான். மூப்பர்களாகிய கண்காணிகள் என்ன செய்கிறார்கள்? சபையை (மந்தையை) மேய்க்கிறார்கள். அதற்குச் சமமான கிரேக்க வார்த்தை Poimaino ஆகும் அதற்கு மேய்த்தல் என்று பொருள் அந்த வேர்ச்சொல்லில் இருந்தே Poimen என்ற சொல் வந்தது ஆகவே பவுல்' மூப்பர்களும் (Elders) கண்காணிகளும் (Bishop or Overrseer) ஆகிய அவர்கள் சபையை மேய்க்க (Pastor or pojmen) வேண்டும் என்று கட்டளையிடுகிறார். ஆகவே இந்த மூன்று வார்த்தைகளும் ஒரே வேலையைச் செய்யும் பல ஆட்களைக் குறிக்கிறது.

1 பேதுரு 5:1-4 வரை உள்ள வசனப் பகுதியும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. ''உங்களிலுள்ள மூப்பருக்கு (Elders) .. நான் புத்தி சொல்லுகிறதென்னவெனில், உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து (Pastor).. மந்தைக்கு

மாதிரியாகக் கண்காணிப்புச் (Bishop) செய்யுங்கள். ஆகவே அப்போஸ்தலர்களாகிய பவுலும், பேதுருவும், மூப்பர்கள் கண்காணிகள், மேய்ப்பர்கள் என்பவர்கள் ஒரே பணியைச் செய்கின்ற வெவ்வேறு நபர்கள் என்கின்றனர். ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள்.

ஆனால் இன்றைக்கு அதை பல்வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்டு உண்மைக் கிறிஸ்தவ ஆளுகை முறையை உருக்குலைத்து சாத்தானுக்குத் துணை போகிறார்கள். அவர்கள் அறிந்தோ அறியாமலோ செய்கிற தவறுகளுக்கு நீங்களும் முத்திரை குத்தி அங்கீகாரம் அளிக்கலாமா?

4. நீங்கள் சபையில் சேர்க்கப்பட வேண்டும் என்றால் நீங்கள் கீழ்க்கண்ட காரியங்களை செய்தாக வேண்டும்.

அ) கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்க வேண்டும்.
அப் 2:36; 16:31; எபி 11:6.

ஆ) உங்கள் பாவங்களுக்காக மெய் மனஸ்தாபப் பட்டு மனம் திரும்ப வேண்டும். லூக் 13:3; அப் 2:38; 3:19;17:30

இ) கிறிஸ்துவின் மேல் உள்ள உங்கள் நம்பிக்கையை அறிக்கை செய்ய வேண்டும். மத் 10:32, 33; அப் 8:37—38

ஈ) திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
மத் 28:19; மாற்கு 16:16; அப் 2:38; கலா 3:27

V. பி. கு. நீங்கள் எட்டாம் நாளிலேயே திருமுழுக்குப் பெற்றுவிட்டேனே, சொல்வீர்கள் அது உங்களுக்கு எப்படித் தெரியும்? என் அப்பா அம்மா சொன்னார்கள். அப்படியா? வேதம் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறது. உரைத்துப் பாருங்கள்.

**திருமுழுக்குப் பெறுவதற்குக் கீழ்க்கண்ட காரியங்கள் அவசியம் :**

அ) தண்ணீர் — அப் 10 : 47

ஆ) அதிகத் தண்ணீர் — யோவான் 3:23

இ) தண்ணீருள்ள இடத்துக்குப் போக வேண்டும்.
அப் 8:36; மத் 3:5, 6.

ஈ) தண்ணீருக்குள் போக வேண்டும். அப் 8:38.

உ) தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட வேண்டும். ரோமர் 6:5

ஊ) உயிர்த்தெழுதலின் சாயலில் எழுந்திருக்க வேண்டும்.
ரோமர் 6:5

எ) பாவங்களைக் கழுவப்பட வேண்டும். அப் 22:16

ஏ) திருமுழுக்கு ஒரு பிறப்புக்குச் சமானம் — யோவான் 3:5

ஐ) விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்திருக்க வேண்டும்.
கொலோ 2:12,

ஒ) தண்ணீருக்குள்ளிலிருந்து வெளியே வரவேண்டும். அப் 8:39

**VI திருமுழுக்கினால் ஏற்படும் சில நன்மைகள் :**

அ) பாவங்கள் கழுவப்படுகிறது. அப் 22 : 16.

ஆ) பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறீர்கள்.
1 பேதுரு 3:20—21; மாற்கு 16:16.

இ) உங்கள் பாவம் மன்னிக்கப்படுகிறது. அப் 2:38

ஈ) நீங்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறீர்கள். கலா 3:27

உ) நீங்கள் சபையில் சேர்க்கப்படுகிறீர்கள். 1 கொரி 12:13

ஊ) புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்கிறீர்கள்.
ரோமர் 6:4

எ) நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறீர்கள்.
அப் 10:48; 2 தெச 1:7—9

**VII சபையிலும், சபைமூலமாகவும் கீழ்க் கண்டவைகள் கிடைக்கின்றன.**

அ) மீட்பு—எபே 1:7; ஆ) மன்னிப்பு — எபே 1:7

இ) பரிசுத்தமாக்குதல் எபே 5:26

ஈ) ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் எபே 1:3

**VIII கிறிஸ்து :**

அ) சபையில் அன்பு கூர்ந்தார். எபே 5:15

ஆ) சபைக்காக தன் சொந்த இரத்தம் சிந்தினார். அப் 20:28

இ) சபையை நிறுவினார் மத் 16:18; அப் 2-ம் அதிகாரம்.

ஈ) சபையை தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடினார்.
மத் 16:18.

உ) சபையில் இரட்சிக்கப்பட்டவர்களைச் சேர்த்துக் கொண்டார்.
மத் 2:47

ஊ) சபைக்கு தலைவர் ஆனார் கொலோ 1:18

எ) அவரே சபையை இரட்சிக்கிறவர் எபே 5:23.

**கலென் கோலி**

# சகோதரத்துவத்தால் கிடைக்கும் ஆசிர்வாதங்கள்

நாம் சத்தியத்துக்குச் செவி சாய்த்து கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது கர்த்தர் நம்மை இரட்சித்து சபையில் சேர்த்துக் கொள்கிறார். அதன் மூலம் கிறிஸ்துவுக்குள் இருக்கிற மற்றவர்களுக்கு நாம் சகோதர சகோதரிகளுமாக எண்ணப்படுகிறோம். அதைத் தான் ''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானநானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவுவைத் தரித்துக் கொண்டீர்களே

யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயதீனனென்றும் இல்லை ஆணென்றும் இல்லை. பெண்ணென்றும் இல்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் என்று பவுல் அப்போஸ்தலன் கலாத்தியருக்கு எழுதும் போது குறிப்பிடுகிறார் (கலா 3:26-28)

மேலும் கிறிஸ்து சபையாசிய சரீரத்துக்குத் தலையாயிருக்கிறார் என்றும் ((கொலோ 1:18) அந்த சரீரத்துக்குப் பல அங்கங்கள் இருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை விளக்க முற்படுகுற அப்போஸ்தலன் பவுல்; ''எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவிங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்கள் எல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகார மாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்''. சரீரமும் ஒரே அவயவராயிராமல் அநேக அவயவங்கடாக இருக்கிறது. (1 கொரி 12:12-4) என்கிறார் அதாவது ஒரே சரீரத்தில் உள்ள பல உறுப்புகள் வெவ்வேறாக இருந்தாலும் எப்படி ஒன்றுக்கொன்று இனக்கமாயக செல்படுகிறதோ அதைப் போன்று சபையின் அங்கத்தினர்கள் பல் வேறு தொழில் செய்கிறவர்களாக இருந்தாலும், இணக்கமாகச் செயல்படவேண்டும் என்று கூறுகிறார். வசனம் 20ல் அவயவங்கள் பலவாக இருந்தாலும் அவைகளில் எல்லாம் இணைக்கப்பட்டிருப்பது ஒரே சரீரத்தில் தானே என்கிறார். தொடர்ந்து 27ம் வசனத்-

தில் இந்த உவமைக்கு அவர்களை நேரடியாகச் சம்பந்தப்படுத்தி ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயங்களாயு-மிருக்கிறீர்கள்'' என்று முடிக்கிறார். இதை விளங்கிக் கொள்-வதற்கு ஏன் சிரமப்படுகிறீர்கள்? ஒரே தேவனும், ஒரே கர்த்தரும், ஒரே ஆவியும் என்றெல்லாம் சொல்லப்படுகிற அதே வசனப் பகுதி யில் தானே ஒரே சரீரமும் என்பதும் சொல்லப்படுகிறது!. (எபே 4:4-6)

சரி, அப்படியானால் சரீரம் என்று எதைக் குறிக்கிறார் என்று கேட்கிறீர்கள்? கொலோ 1:18க்குத் திருப்புங்கள்: அவரே ஈபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல் வராயிருக்கும்படி அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.'' என்று கிறிஸ்துவின் நிலையைப் பற்றிச் சொல்லி விட்டு, ''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத்தந்தருளினார்''. என்று இணைக்கிறார் (எபே 1:22,23) இவைகளைத் தொகுத்துப்பார்க்கும் போது கிறிஸ்து சரீரத்துக்குத் தலையாய இருக்கிறார் சபை சரீரமாக இருக்கிறள். அந்தச்சரீர-மாகிய சபையில் கிறிஸ்தவர்கள் அல்லது தேவனுடைய பிள்ளை கள் என்கிறவர்கள் அவயவங்களாக இருக்கிறார்கள் நாம் ஏற்கன-வே எபே 4:4-6 வரை பார்த்தபடி அந்த ''ஒரே சரீரம்'' இங்கே குறிப்பிட்டுள்ள ஒரே சபை தான். அந்த சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானது.

மேலும் பேதுருவும், தீமோத்தேயும் சபையை தேவனுடைய வீடு என்று குறிப்பிடுகிறார்கள். (1பேது 4:18 ; 1தீமோ 3:15) எபிரேய நிருப ஆசிரியர், ''கிறிஸ்துவோ அவருடைய வீட்டுக்கு மேற்பட்ட வரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்'' என்று கூறி, கிறிஸ்து காட்டுகிறார். அந்த வீடு என்பது தேவனு-டைய அல்லது கிறிஸ்துவினுடைய சபையைக் குறிக்கிறது. ஏற்கன வே 1 தீமோ 3:15ல் பார்த்தோம். வீடு என்பதற்குக் குடும்பம் என்ற பொருளும் உண்டு. ஆக அந்த வீட்டைக் கர்த்தருடைய ஆவிக்குரிய குடும்பம் என்றும் சொல்லலாம். அந்தக் குடும்பத்துக்கு கிறிஸ்து தலைவராகவும், அதன் அவயங்களாகிய கிறிஸ்தவர்கள் சகோதரர்களும் சகோதரிகளும் ஆவர்.

சபை உலகளாவியது (மத் 16:18) அதன் பிராந்திய சபை கள் உலகெங்கிலும் பரவிக் கிடக்கிறது. ஆயிலும் அவைகள் வித்தி-யாசமானவைகள் அல்ல. அந்தந்தப் பகுதிகளில் சத்தியத்தைக் கேட்டுக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள். அவர்களுக்கிடையே ஒற்

றுமையும் ஐக்கியமும் உண்டு ஏனெனில் அவர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் கிறிஸ்துவைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர்கள் யாவரும் ஒரே பெயரைத் தரித்துக் கொண்டியிருக்கிறார்கள். எல்லாரும் ஒரே விதமான ஆராதனை ஒழுங்கைப் பின்பற்றுகிறார்கள். அவர்களுடைய உபதேசமும் ஒன்றே. அவர்களுள் நெருக்கமான தொடர்பும் ஒற்றுமை உணர்வும், சகோதர பாசமும் உண்டு. ஏனெனில் அவர்களுடைய எல்லாரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களும், சகோதரிகளும் ஆகும். ஒருவர் ஒரு இடத்துக்குப் போக நேர்ந்தால் அங்குள்ள சகோதர சகோதரிகளோடு சேர்ந்து ஆராதிருக்கிறார்கள், அவர்களுடைய ஏதாவது ஒரு பிராந்திய சபையில் ஒரு சிறப்பு நற்செய்திக் கூட்டம் என்றால் எல்லாருமே ஒத்அழைப்புக் கொடுத்து ஒருவரையொருவர் உற்சாகப்படுதிதிக் கொள்கிறார்கள். ஒருவருக்கு ஒரு கஷ்டம், பிரச்சனை என்றால் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிறார்ாள். ஒரு குறிப்பிட்ட இடத்திலே அவர்கள் எண்ணிக்கையிலே குறைவுள்ளவர்களாக இருந்தாலும் நாடெங்கிலும், கணக்கெடுத்தால் அவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். தனித்தனியாக எடுத்துக்கொண்டால் பலவீனர்களாக இருந்தபேரதிலும், மொத்தத்தில் அவர்கள் பலமுள்ளவர்கள்.

சகோதரத்துவத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலன் பேதுருவின் அறிவுரையும் கூட அது தானே ''எல்லாரையும் கனம் பண்ணுங்கள் சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள் ராஜாவைக் கனம் பண்ணுங்கள்.'' 1பேது 2:17

சகோதர அன்பைப் பற்றி வேதாகமம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திக் கூறுகிறது. ''சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது என்கிறது எபிரேய நிருபம் (எபி 13:1)'' சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும்படி தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே'' என்று 1 தெச 4;9 லும், கிறிஸ்தவக் கிருபைகளில் சகோதர சிநேகமும் இடம் பெற்றிருக்கிறதை 2பேது 1:7ம் வாசிக்கிறோம். சகோதர அன்பு என்பது: கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒரு சகோதரன் அவரைப் போலவே கிறிஸ்துவின் குடும்பத்தில் அங்கம் வகிக்கிற இன்னொரு சகோதரனில் அன்பு கூறுவதாகும். அதே போல ஒரு சகோதரி மற்றொரு சகோதரியை நேசிப்பதாகும்,எனவே எங்கே சகோதர அன்பு இருக்கிறதோ அங்கே சகோதரர்கள் ஒருவருக்கொருவர் பாசத்துடன் பழகுவார்கள்

ஒருவருக்கொருவர் அன்புடன் இருப்பார்கள், ஒத்துழைப்பார்கள், உதவி செய்து கொள்வார்கள்.

1 கொரி 12-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மாமிசப் பிரகாரமான சரீரத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அவயவங்கள் பிரிவினை பாராட்டுவதில்லை. ஒருவரை ஒருவர் எதிர்த்துக் குழி பறிப்பதில்லை. ஒருவருக்கொருவர் பொறாமைப் பட்டுக் கொள்வதில்லை. ஒருவரை யொருவர் தகாத வார்த்தை-களைப் பேசிக் கொண்டு சண்டைப் பண்ணிக் கொள்வதில்லை. மாறாக அவைகள் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன. ஒன்றுக் கொன்று ஒத்துழைக்கின்றன. அதை போன்று தானே கர்த்த-ருடைய சபையாகிய சரீரமும் இருக்க வேண்டும்.! சகோதரர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒன்றுபட்டுச் செயல் பட வேண்டும். ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு கூர வேண்டும். அவர்கள் ஒருக்காலும் ஒருவருக்கொருவர் எதிர்த்துச் செயல் படக் கூடாது. ஒருவர் மீது ஒருவர் பொறாமைப் படக் கூடாது ஏனெனில் அவர்கள் ஒரே சரீரத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் அவர்களுக்குப் பலம். ஒருவரை யொருவர் எதிர்த்து வேலை செய்தால் சத்துரு-வாகிய சாத்தானுக்குத் தான் கொண்டாட்டம். நாம் அறியாமை யினால் நம்முடைய ஜென்மப் பகைவனாகிய சாத்தானுக்கு துணை போகிறவர்களாகிறோம். இதைப் புத்தியுள்ளவர்கள் செய்வார்-களா?

நம்முடைய நாட்டிலும், உலகம் முழுவதிலும் நமக்குச் சகோதர்களும் சகோதரிகளும் இருக்கிறார்கள் நாம் உலகத்தின் எந்தக் கோடிக்குச் சென்றாலும், கிறிஸ்துவுக்குள் இருக்கிற சகோதர சகோதரிகளைச் சந்தித்து அளவளாவ முடியும். நம்மை வரவேற்று உபசரிக்க அவர்களும் ஆவல் உள்ளவர்களாகக் இருப்-பார்கள். நாம் எவ்வித மாறுதலுமின்றி ஒன்றாக ஆராதித்து மகிழலாம். நாம் இனத்தால் வேறுபட்டவர்களாக இருந்தாலும், மொழி கலாச்சாரம், தொழில், நிறம் ஆகியவைகளில் வேறுபட்-டிருந்தாலும் குறிஸ்துவுக்குள் ஒன்றாகவே இருக்கிறோம் நமக்குள் எவ்விதமான ஏற்றதாழ்வும் கிடையாது. நிச்சயமாக கர்த்தரும் கூட நம்மை எவ்வித வித்தியாசமுமின்றி சமமாக, தம்முடைய பிள்ளைகளாகவே பார்க்கிறார். நாம் அவரால் இரட்சிக்கப்பட்ட-வர்கள் என்பதும், நாம் அவர்களுக்குச் சொந்தமானவர் என்பதும், அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற கரிசனையுடன் நம்மைக் கூட்டிச் செல்வதற்காக மீண்டும் வருவார். அதை அப்போஸ்தலன் பவுல் ''**ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயிம்,**

**இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்-தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்** இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களடங்கிய சகோதரத்துவத்தையும் உலகத்தின் மிகப் பெரிய ஸ்தாபனமகிய கிறிஸ்துவின் சபையையும் நாம் பெற்றிருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

**J.C. சோட்**

## 28-ம் பக்க தொடர்ச்சி

படுத்தி மகிழ்ந்தான் என்று எழுதியிருக்கிறார். இவர் யூதரோ, கிறிஸ்துவத்தைத் தழுவிய ஒரு நபரோ அல்ல, 'இவர்' ஒரு விக்கிரக வணக்கத்துக்காரர். வேலை செய்வதோ ரோமப் பேரரசிடம். இவர் இயேசுக் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவத்துக்கும் வக்காலத்து வாங்க வேண்டிய அவசியமில்லை.

ஜோசிபஸ் (Josephus) என்பவர் மிகப் பிரபலமான எல்லா-ராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட யூத வரலாற்று ஆசிரியர். இவரு-டைய முழுப் பெயர் (Flaviys Josephus) ப்ளாவியஸ் ஜோசிபஸ். தம் இளம்பிராயத்தில் யூதத் தளபதியாகப் பணியாற்றிய பின் வரலாற்று ஆசிரியராக மாறினவர். புதிய ஏற்பாட்டின் முக்கிய ஏற்பாட்டின் முக்கிய நபர்களைப் பற்றிக் குறிப்புகள் எழுதி வைத்-துள்ளார். பிலாத்து எரோதியர்கள் பரிசேயர்கள், துசேயர்கள், அண்ணாளையப்பா கவர்னர்கள் பேலிக்ஸ், பெஸ்தா போன்ற-வர்களைப் பற்றியும் பவுல் அப்போஸ்தலனைப் பற்றியும், இயேசு-வின் சகோதரர்கள் யாக்கோபு யோவான் ஸ்நானகன் போன்ற-வர்களைப் பற்றியும் எழுதி வைத்திருக்கிறார்.

மிகவும் பிரசித்தி பெற்ற அவருடைய எழுத்துக்களில் அவர் இயேசுவைப் பற்றிச் சொல்லியிருப்பதே மிகவும் 'சிறந்தது'. இந்தக் காலக்கட்டத்தில் ஒரு ஞானமுள்ள மனுஷன் எழும்புகிறார். அவர் பெயர் இயேசு. நாம் ஒரு சாதாரண என்று நினைத்தாலும் கூட அவருடைய செய்கைகள் மிகவும் ஆச்சரியப்படத் தக்கவை-கள். சத்தியத்தை ஏழை, எளிய பாமர மக்களும் புரிந்து கொள்-ளும் வகையில் எளிமையாகப் போதித்து அவர்களை கவர்ச்சி செய்கிறார். அதுமட்டுமல்ல அநேக யூதப் பெருமக்களை-யும் அறிவில் சிறந்த கிரேக்ககர்களையும் கூட வெற்றி கொண்டார்.

இந்த மனிதனே (Messiah) ரோம ஆளுநராகிய பிலாத்து அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுத்ததாகவும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து தம்முடைய தொண்டர், களுக்கும், அபிமானிகளுக்கும் காணப்பட்டார் என்றும் சொல்லி-யிருக்கிறார். இது தற்செயலாய் நடந்தது அல்லவென்றும் வெகு காலத்துக்கு முன்பே தீர்க்கதரிசிகள் அவர் உயிரோடே எழுந்திருப் பார் என்று எழுதியிருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றும் கூடக் குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுதும் கூட மக்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அவர் பெயரால் அழைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்.

இது போன்று எத்தனையோ தடயங்கள், வரலாற்றில் கிறிஸ்தவம் ஒரு வரலாற்றுக் காவியம் என்று சாட்சி பகர்கின்றன.

**V. தானியேல் துரைராஜ்.**

# ஜெபத்துக்குத் தடைகள்

ஒரு அறிஞர் கூறினார். ஜெபம் ஒரு நாளைத் திறக்கிற திறவு கோலாகவும் இரவைப் பூட்டுகிற பூட்டாகவும் இருக்க வேண்டும்''. அதாவது தூங்கி எழும்போது முதல் வேலையாக ஜெபம் செய்ய வேண்டும். படுக்கும் போது கடைசி வேலையாக ஜெபிக்க வேண்டும் ஆதிச் சபை ஜெபிக்கிற சபையாக இருந்தது. (அப் 2:42) நாமும் கூட அதைப் பின் பற்ற வேண்டும். நாம் ஜெபிப்பதற்கு எவ்வளவு குறைவான நேரத்தை ஒதுக்குகிறோமோ அதற்கு ஏற்றாற்போல நம்முடைய ஆசீர்வாதமும் குறைவாகத்-தான் இருக்கும். (யாக் 4:2) ஆக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதிக நேரம் ஜெபத்துக்காக ஒதுக்குவதற்கு முயல வேண்டும். அதிக நேரம் ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளச் சிறந்தவழி ஜெபத்திற்குத் தடையாக இருக்கிறவைகளைக் கண்டு பிடித்து அவைகளை அகற்ற வேண்டும்.(1பேதுரு 3:7)இதோ சில தடைகள்!

**1) வீட்டில் சமாதானம் இல்லாமை :**

கணவன் மனைவியோ அல்லது பெற்றோர். பிள்ளைகளு-மோ சமாதானம் இல்லலாமல் எரிச்சலும் புகைச்சலுமாக இருந்-தால் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருடைய மனநிலையும் பாதிக்-கப்பட்டு ஜெபத்துக்கு தடை ஏற்படும், குடும்பத்தில் ஏற்படும். சண்டை சச்சரவுகள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாழ்படுத்தி ஜெப சிந்தையையே வறட்சியடையச் செய்யும் (1 பேதுரு 3:7)

**2, மன்னிக்க விரும்பாத ஆவி :**

ஒருவரையொருவர் நாம் மன்னிக்கிறதற்குத் தயாராக இல்லாவிட்டால் நம்முடைய ஜெபம் பரத்துக்கு ஏறிப் போவதற்குத் தடை உண்டாகும். (மத் 6:14-16;எபே 4:32) தேவனும் கிறிஸ்துவும் மன்னிக்கிறது எப்படி என்று நமககு முன் மாதிரி காட்டியிருக்கிறார்கள். நாமும் அப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் கட்டளையாகவும், நிபந்தனையாகவும் கொடுத்திருக்கிறார்கள்.

**3. கலகக் குணம் :**

நாம் ஆண்டவரைச் சந்தேகிக்கவும், கேள்வி கேட்கவும் ஆரம்பித்தால் நம்முடைய ஜெப வாழ்க்கை உருப்படாது. அப்படிப் பட்டவர்கள் ஜெபித்தாலும் அவர்கள் ஜெபத்தை தேவன் கேட்ப-தில்லை. (நீதி 15:8) சவுல் அரசனுடைய மன்றாட்டை தேவன் நிராகரித்ததை வாசித்துத் தியானியுங்கள்.

(சாமு 15:23)

4 **கர்த்தருடைய வசனத்துக்கு உரிய மரியாதை கொடுக்காததன்மை :**

நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கருத்தாய் கவனமாய்க் கேட்க விரும்பாத போது, நம்முடைய ஜெபங்கள் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை. (நீதி 28:9) பள்ளிச் சிறுவன் ஒருவனுடைய தாய் அவனுடைய வேதாகமத்தின் முதல் பக்கத்தில் கீழ்க்கண்ட வாசகத்தை எழுதி வைத்தாளாம். ''இந்தப்புத்தகத்தை நீ வாசித்துக் கடைப் பிடித்தால் இது உன்னை பாவத்துக்கு விலக்கி வைக்கும். அப்படிச் செய்யத் தவறினால் பாவம் இந்த புத்தகத்தை நீ வாசிக்காதபடி விலக்கி வைத்துவிடும்.'' ஆம் சகோதரரே என வசனத்துக்குப் பயந்து நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்கிறார் தேவன் (ஏசாயா 66:2) நாம் கர்த்தருடைய வசனத்தின் மேல் நாட்டமில்லாதவர்களாக இருந்தால் நமக்கு ஜெபிக்கும் எண்ணமே வராதபடி சாத்தான் தடுத்துப் போர்வான்.

5, **மாயம் பண்ணுதல் :**

நாம் மனிதர் பார்க்க வேண்டும் என்று விரும்பி, பார உணர்வு இல்லாமல் கேட்பவர்கள் மெச்சிக் கொள்ள வேண்டும் என்று ஜெபிப்போமானால் அந்த ஜெபம் பிறக்கும் போதே பிணம் ஆகிப் போன கதை தான். போலி பக்தியைக் கர்த்தர் கடுமையாகச் சாடுகிறார். (மத் 6:5)

6, **மனந்திரும்பாத நிலை ;**

நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற பாவங்களைக் குறித்து நாம் மெய் மனஸ்தாபப்படாமல் இருந்தால் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படமாட்டாது. பாவத்தில் நிலைத்திருக்கிறவனுடைய ஜெபத்தை தேவன் கேட்பதில்லை (1பேதுரு 3:12) பாவம் தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவில் தடுப்புச் சுவராக நிற்கிறதாக ஏசாயா கூறுகிறார். (ஏசாயா 59:1-2) **"என் இதயத்திலே அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவி கொடார்.** (சங் 66:7-8. செல்வந்தனான ஒரு மனிதனுக்கு ஒரு மகன் இருந்தான் அவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கி ஓட்ட வேண்டும் என்று கொள்ளை ஆசை அவனுக்கு சைக்கிள் என்ன, விமானமே கூட வாங்கிக் கொடுக்க அவனுடைய தந்தையால் முடியும். ஆனால் அந்த மகனுக்கோ அவனுடைய ஆசையை தகப்பனாரிடம் சொல்லத் தயக்கம். ஏனெனில் அவனுடைய படிப்பைப் பற்றியும் அவனுடைய ஒழுக்கத்தைப் பற்றியும் பல புகார்கள் அவனுடைய தகப்பனாருக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அது தன் தகப்பனாருக்கு வெறுப்பையும்

கோபத்தையும் உண்டாக்கியிருக்கும் என்று அவன் பயப்படுகிறான். நாமும் அப்படித்தான். நம்முடைய பாவங்கள் காரணமாக கர்த்தரிடத்தில் நம்முடைய தேவைகளுக்காக மன்றாட முடியாத நிலையில் இருக்கிறோம் ஆனால் மெய் மனஸ்தபப்பட்டு அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டால் மன்னித்து நம்மை ஏற்றுக் கொள்வார் இல்லா விட்டால் நம்முடைய ஜெபத்தைக் கேட்க மாட்டார்.

**7. விசுவாசக் குறைவு :** நாம் ஜெப வாழ்க்கையில் சிறந்து விளங்க வேண்டும் என்றால் தேவன் மீது விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் சந்தேகப்படாமல் விசுவாசத்துடனே கேட்க வேண்டும் (யாக் : 7,8) ஜெபம் செய்வது நம்முடைய சுய திருப்திக்குத்தான் என்று எண்ணுவோமானால் அதிகக் கருத்துடன் ஜெபிக்க மாட்டோம். ஜெபம் என்பது நாம் தேவனிடத்தில் பேசுவதற்குச் சமானம், நம்முடைய ஜெபத்தை தேவன் கேட்டு பதில் அளிக்கிறார் என்று விசுவாசித்துச் செய்ய வேண்டும்.

**நேரக்குறைவு :** தற்காலத்தில் வாழுகிற மக்களுக்கு நேரக்குறைவு ஒரு பெரிய தடை. நம்முடைய தேவைகள் பெருகி நம்முடைய நேரங்களை விழுங்கி விடுகிறது. ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்பதை இன்றும் இரண்டு மணி நேரம் கூட்டிக் கொடுத்தால் அப்பவும் நேரம் போதாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஜெபத்துக்கு நேரம் ஒதுக்குவது தேவை தானா? என்று நம்முடைய மனைவி, பிள்ளைகள் ஏன் நாமே கூட யோசிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு நாளிலும் நமக்கு இருக்கிற பல்வேறு பிரச்சனைகளை வெற்றிகரமாகவும், பதட்டமில்லாமலும் செய்து முடிக்க ஜெபம் பெரும் துணை செய்கிறது என்பதை அனுபவம் மூலம் ருசித்துப் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். மார்ட்டின் லுத்தர், தினமும் இரண்டு அல்லது அல்லது மூன்று மணி நேரமாவது நான் ஜெபிக்காவிட்டால், அன்றாடம் எனக்கு இருக்கிற ஏராளமான வேலைகளை நான் முடிக்கவே முடியாது என்கிறார். தாவீது அரசன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை வெற்றிகரமாக நிர்வாகம் செய்தவர். இரவும், பகலும் தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையும் அவருடைய வசனங்களைத் தியானிப்பதற்கும் முடிந்தது. நாம் அவர்களை விட அதிக வேலைப் பளு உள்ளவர்களா? நம்முடைய வாழ்க்கையைச் சீர் தூக்கிப் பாரப்போம். தேவனுடைய கிருபாசனத் தண்டைக்கு நாம் இட்டிச் சேராதபடி நம்மைத் தடுத்து நிறுத்தும் காரியங்கள் எவையேலும் உண்டா? அவைகள் உண்மையாகவே தேவனுடன் உரையாடி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதை விட முக்கியமானவைகள் தானா? கர்த்தரை நேசித்து

சாதனைகள் புரிந்த ஆண்களையும், பெண்களையும் நினைத்துப் பாருங்கள். அவர்கள் ஜெபம் என்ற நெம்புகோலை பயன்படுத்தி செயற்கரிய செயல்களைச் செய்து நமக்கு வழி காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே நாமும் நம்முடைய தனி அறையிலோ அமைதியான ஒரு இடத்திலோ அமர்ந்து இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபித்து கர்த்தரோடு தொடர்பு கொள்ள முயல்வோமாக!

**ஸ்டீவ் வில்லியம்ஸ்.**

## பரிசுத்த வேதாகமத்தின் சிறப்பு

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தைச் சந்தோஷிப்பதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப் படத் தக்கதும், தேனிலும், தேன் கூட்டிலிருந்தும் ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.

அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக் கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.

# கிறிஸ்தவ மார்க்கம்

இன்று உலகில் மனிதவர்க்கம் நல்லதைப் பேசி நல்லவை-களைச் செய்து, ஒருவருக்கொருவர் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்கிறார்கள் என்றால் அல்லது செய்யக்கூடிய மனப்போக்கு Motivation உருவாகியுள்ளது என்றால் அதற்கு இயேசுக்கிறிஸ்து-வின் உயிர்த்தெழுதலினால் பலமாய் நிரூபிக்கப்பட்ட கிறிஸ்தவமே காரணம் என்றால் மிகையாகாது.

கிறிஸ்தவம் வ ர லா ற் றை அடிப்படையாகக் கொண்ட மார்க்கம். வரலாற்று அடிப்படையில் உயிர்த்தெழுந்த, ஆளுகை செய்து கொண்டிருக்கின்ற, நியாயத் தீர்ப்புச் செய்ய வந்து கொண்-டிருக்கின்ற இயேசு கிறிஸ்துவை நாயகனாகக் கொண்ட மார்க்கம்.

கிறிஸ்தவம் என்பது சிறந்த ஒழுக்க நெறிகளை அடிப்படை-யாகக் கொண்ட ஒரு மார்க்கம் என்பதோடல்லாமல் வரலாற்று ஆதாரத்தோடு நிரூபணம் செய்யக் கூடிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் உள்ளடக்கிய வரலாற்றுக் காவியம்.

புதிய ஏற்பாட்டை நாம் முழுமையாக வாசித்துப் பார்க்கும் போது, அதை எழுதின மனிதர்களும், அவர்கள் அவற்றை எழுது-வதற்குக் காரணமாயிருந்த பிதாவாகிய தேவனும், மனித சமு-தாயத்தின் மீட்பை மிகவும் ஒழுங்காகவும், சிரமப்படியும் எழுதி-யிருப்பதைக் காண முடியும்.

முதலாம் நூற்றாண்டிலே ரோமப் பேரரசுக்குட்பட்டிருந்த சில நிர்வாக அதிகாரிகளின் வரலாற்றுக் குறிப்புகளில் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதில் இயேசுக் கிறிஸ்துவை ''ஒரு சிறந்த மனித சமுதாயத்தை உரு-வாக்கும் சிற்பியாக வர்ணித்திருக்கிறார். அவருடைய செல்வாக்கை எதிர்க்கவோ அழிக்கவோ ரோமப் பேரரசுக்கு இயலவில்லை என்-றும் அவர் குறிப்பிடுகிறார்.

பண்டைக் காலத்தில் புகழ்பெற்ற மனிதர்களாகிய சாக்ரடீஸ், பித்த கோரஸ் போன்ற தத்துவ ஞானிகளோடு இயேசு கிறிஸ்து-வும் இணைக்கப்பட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்-ததாக F.F. ப்ரூஸ் என்னும் வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிடு-கிறார்.

ரோம வரலாற்று ஆசிரியர்களில் புகழ் பெற்றவன் கொரி-நெலியஸ் டாசிட்டன் என்பவர். அவர் அநேகமாக நீரோ மன்னன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடும் என்று தோன்று-கிறது. அந்நாட்களில் கிறிஸ்தவர்கள் பெருகிக் கொண்டு வந்ததால் ஆத்திரமடைந்த இக் கொடியவன் ரோம் நகரத்துக்கு தானே நெருப்பிட்டுக் கொளுத்தி விட்டு அதைக் கிறுஸ்தவ மக்கள் தான் செய்தார்கள் என்று நாடகமாடி கிறிஸ்தவர்களைக் கொடுமைப்



(23-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8105, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 *(Kerala)*
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

வாசக அன்பர்களுக்கு :

திருமறை ஆசான் பழைய இதழ்கள் வேண்டுவோர் எந்த ஆண்டு எந்த மாதத்துக்குத் தேவை என்று எழுதி-னால் முடிந்தவரை அனுப்பித் தரப்படும். ஆனால் தேவைப் படும் ஒவ்வொரு இதழுக்கும் 50 பைசா தபால் தலை அனுப்பித் தர வேண்டும்.

Bind செய்த ஒவ்வொரு ஆண்டு இதழ்களும் கிடைக்கும்.

கர்த்தருக்குச் சித்தமானால், நமது அடுத்த வாசகர்கள் கருத்தரங்கம் பாளையங்கோட்டையில் மே மாதம் நடைபெறும் நெல்லை, வ.உ.சி, கன்யாகுமரிமாவட்ட வாசகர்கள் கலந்து கொள்ளத் தயாராகுங்கள். ஜெபியுங்கள்.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.